சப்ரகமுவ மாகாண சபை - 2023

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சப்ரகமுவ மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களைக் கொண்ட 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்ரையிலுள்ள 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 12 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முதலீட்டு வட்டி வருமானத்திற்குரிய ரூபா.3,001,541 தொகையான நிறுத்தி வைத்தல் வரி, வட்டி வருமானத்தில் செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படும் என்பது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 594 மாகாண வீதிகளுக்கான 2653 கிலோ மீட்டர் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2023 ஆம் ஆண்டு மற்றும் கடந்த 04 வருடங்களில் மட்டும் வீதிகளுக்காக ரூபா. 584,584,187 தொகை மூலதன செலவாக செலவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுகளில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா.41,723,295 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | அந்த குறைபாட்டினைத் திருத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பது. | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பங்களிப்புடன் கொரியா அரசின் செமாவுல் உலகமயப்படுத்தல் அறக்கட்டளையில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா. 314,992,689 தொகை மற்றும் அதன் மூலம் உருவாகிய சொத்துக்கள், அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையிலும் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதே போன்று, இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்களிலும் அந்த கொடுக்கல் வாங்கல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கான வேலைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | - மேற்படி |
| (உ) | ரூபா.7,820,900 கூட்டுத்தொகையான சமூக சேவைகள் பிரிவிற்கு உரிய உபகரணங்கள் மற்றும் 24 சோடி தங்கத் தோடுகளும், 02 சிறுவர் காப்பு விடுதிக்கு உரிய காணி மற்றும் கட்டிடங்களும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் அரச மதிப்பீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அனைத்து சொத்துக்களும் எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படும் என்பது. | - மேற்படி - |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சப்ரகமுவ மாகாண சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தனது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 800 – ஆளுனர் அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆளுநரின் செயலாளர் அலுவலகத்தில் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக அரச கணக்காளர் ஒருவரை நியமித்து 2012 செப்டம்பர் தொடக்கம் இதுவரையில் ரூபா.430,452 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, கணக்காளரின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அந்த அலுவலகத்தில் நிதி உதவியாளருக்கு மாதாந்தம் ரூபா. 1,000 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காளர் பதவியொன்று அங்கீகரிக்கப்படவில்லை என்பதனால் மேற்பார்வை கணக்காளர் ஒருவரது சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நிதி உதவியாளரினால் அந்த பதவிக்குரிய கடமைகள் நிறைவேற்றப்படுவதனால் ரூபா. 1,000 கொடுப்பனவு கௌரவ ஆளுநரின் அனுமதியுடன் செலுத்தப்படுகின்றது. | கணக்காளரது பணிகள் நிதி உதவியாளரினால் நிறைவேற்றப்படுகின்றது என்பதனால் கணக்காளருக்கான சம்பளக் கொடுப்பனவு அவசியமற்றது. |

#### 1.5.1.1. அவசர சந்தர்ப்ப நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியம் தாபிக்கப்பட்ட நியதிச் சட்டத்திற்கு அமைய, ஏனைய நியதிச் சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் நிதி இந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிதியம் ஆரம்பிக்கப்பட்டு 24 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இதுவரையிலும் எதுவிதமான நிதியும் நிதியத்தில் செலவு வைக்கப்படவில்லை. | நிதியத்தின் வரம்பு மற்றும் அவசர சந்தர்ப்பம் எழாத காரணத்தால் நிதி ஒதுக்கப்படாதத்துடன் 2025 மதிப்பீட்டிற்கு ஏதேனும் தொகையினை ஒதுக்குவதற்குக் குறித்துக் கொள்ளுகின்றேன். | நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.2. தலைப்பு 801 – மாகாண சபை செயலாளர் அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண சபையினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மாகாண சபை கலைக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு வரையில் அனைத்து அமைச்சர்களுக்கும், மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் ஆளுநர் மற்றும் தலைவருக்கும் 02 காப்பீட்டு திட்டங்கள் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | அந்த முன்மொழிவுகள் எதற்கும் ஆளுநரின் அனுமதி காணப்படவில்லை. எவ்வாறு இருப்பினும், இந்தத் திட்டங்களை அங்கீகரித்த அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ஆளுநரின் அனுமதி தொடர்பில் குறிப்புக்கள் இல்லை என்பது சபை செயலாளரினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டு இருந்தது. | அமைச்சரவையின் மற்றும் செயற்குழுவின் தீர்மானத்தை மீறி நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடியாது என்பது. | குறித்த விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | இந்த காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த காப்பீடு 1988 இன் 37 ஆம் இலக்க மாகாண சபை (சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவு செலுத்துதல்) அதிகாரச் சட்டத்தின் 02 ஆம் பிரிவிற்கு இணங்கவில்லை என்பதால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் வருடாந்த தவணையாக ரூபா. 53,895,838 மாகாண சபை நிதியத்தில் இருந்து மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மாகாண நிர்வாகம் மற்றும் மாகாண சபை அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டங்களில் மேலதிக கொடுப்பனவு இடம்பெறவில்லை என்பது. | அதிகார சட்டத்திற்கு இணங்குதல் வேண்டும். |

### 1.5.3. தலைப்பு 804 – மாகாண பிரதம செயலாளர் அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சப்ரவமுவ மாகாண சபை கட்டிடத் தொகுதி அமைந்துள்ள ரூபா. 9,280,000 பெறுமதியான காணிக்குத் தேவையான அனுமதி கிடைத்துள்ள போதிலும், 2024 ஏப்ரல் வரையிலும் அது கையகப்படுத்தப்படவில்லை. | காணியினை ஒப்படைக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காணியை மாகாண சபை பொறுப்பேற்க வேண்டும். |
| (ஆ) | மாகாண சபை கட்டிடத் தொகுதியின் உள்ளகத் தொலைபேசி ஒழுங்கமைப்பு 2019 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட போதிலும், வழமையான நிலைமைக்கு திரும்பாத காரணத்தால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா. 1,609,055 தொகை பலனற்ற செலவாக இருந்தது. இதனால் புதிய தொலைபேசி ஒழுங்கமைப்பிற்காக இலங்கை டெலிகொம் நிறுவனத்தினால் ரூபா. 4,566,578 இற்கான மதிப்பீடொன்று 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்குத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை கிடைத்திருந்த போதிலும், பெறுகை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் உள்ளகத் தொலைபேசி ஒழுங்கமைப்பை செயல்படுத்துவதற்கு இதுவரையில் முடியாதுள்ளது. | உத்தியோகத்தர்களின் கையடக்கத் தொலைபேசி கடமைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனால் உள்ளக தொலைபேசி ஒழுங்கமைப்பின் தேவைப்பாடு காணப்படவில்லை என்பது. | நிலையான தொலைபேசி செலவு அதிகம் என்பதால் உள்ளக தொலைபேசி ஒழுங்கமைப்பு தாபிக்கப்பட வேண்டும். |

### 1.5.4. தலைப்பு இலக்கம் 805 – பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி)

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 14/2022 மற்றும் 2022 ஜூன் 22 ஆம் திகதி இடப்பட்ட அரச பொது நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை பெற்றுக் கொண்ட 38 உத்தியோகத்தர்களுக்கு 2024 மார்ச் வரையிலும் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மாகாண சபை நிறுவனத் தலைவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அத்தியாவசியப் பதவிகளான கணக்காளர் மற்றும் தொழில்நுட்ப சேவைக்காக 2023 ஆம் ஆண்டு இறுதியில் முறையே உத்தியோகத்தர்கள் 16 மற்றும் 157 வெற்றிடங்கள் காணப்பட்டன. | கணக்காளர் சேவைக்கு 02 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு மற்றும் 20 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களைத் தொழில்நுட்ப சேவையில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது என்பது. | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.5. தலைப்பு இலக்கம் 806 – பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்)

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா. 14,694,555 வெளிநாட்டு உதவியை செலவிட்டு மாகாணத்திற்காக 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்தாண்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் முன்னேற்றம் பரீட்சிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்தத் திட்டத்தில் நிறைவேற்றப்படாத இலக்குகள், எதிர்காலத் திட்டங்களுக்குள் உள்ளடக்குதல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்தத் திட்டத்தின் எட்டப்படாத இலக்குகள் எதிர்கால மாகாண அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கப்படும் என்பது. | திட்டத்தின் முன்னேற்றத்தினை பரீட்சிப்பு செய்து எதிர்காலத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.6. தலைப்பு இலக்கம் 808 – பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அலுவலகத்திற்கு சொந்தமான சுமார் 10 ஏக்கர் பகுதியைக் கொண்ட 24 காணித் துண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட 40 உத்தியோகப்பூர்வ இல்லங்கள் காணப்பட்டதுடன் அதில் 20 காணித் துண்டுகளின் உரிமை கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | காணியின் உரிமையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் ரூபா.43,507,900 செலுத்தி 970 தார் பீப்பாய்கள் மற்றும் 120 கோலாஸ் பீப்பாய்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் போது களஞ்சியசாலையில் போதுமான அளவு இருப்பு காணப்பட்ட போதிலும் மற்றும் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்துடன் இருப்பு கைமாற்று செய்யக்கூடிய திறன் இருக்கையில் மீண்டும் இருப்பு கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தால் 07 மாத காலம் தொடக்கம் ரூபா.36,188,610 ஆன 904 தார் மற்றும் கோலாஸ் பீப்பாய்கள் மேலதிக இருப்பாகக் களஞ்சியசாலையில் தேங்கி இருந்தது. | தவிர்க்க முடியாத காரணத்தினால் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட கோலா அளவு பயன்படுத்தப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பது. | தேவையினை இனம் கண்டு கொள்வனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.7. தலைப்பு இலக்கம் 809 – மாகாண இறைவரித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் நிலுவை இறைவரி 58 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | கொடுப்பனவு விபரங்கள் காலதாமதம் இன்றி கிடைக்குமானால், நிலுவை வரி இதை விட மிகவும் குறைவடையும் என்பது. | நிலுவை இறைவரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா.90,769,688 ஆன நிலுவை இறைவரியில் ரூபா.7,554,095 தொகையானது 10 வருடங்களுக்கும் 22 வருடங்களுக்கும் இடையிலும், ரூபா.2,487,429 தொகையானது 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலும், ரூபா.80,728,164 தொகையானது 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலும் காணப்பட்டது. இதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்படாத 174 வழக்குகள் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கின்றேன். நிலுவை இறைவரியினை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பது. | - மேற்படி - |
| (இ) | நொத்தாரிசினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 139 பத்திரங்களுக்காக ரூபா.2,261,380 முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், தண்டப் பணமாக இனம் காணப்பட்ட ரூபா.710,600 இல் ரூபா.532,950 ஐ நீக்குவதற்கு மாகாண இறைவரி ஆணையாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். | அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. நிலுவையை அறவிடுவதற்குத் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆணையாளருக்கு இருக்கும் அதிகாரங்களின் அடிப்படையில் தண்டப் பணத்தில் ஒரு பகுதி நீக்கப்பட்டுள்ளது என்பது. | நிலுவை இறைவரி அறவிடப்பட வேண்டும். சேகரித்த இறைவரியினைச் செலுத்தாது இருத்தல் நிதி மோசடி என்பதால் தண்டப் பணத்தினை நீக்குதல் மேற்கொள்ளப்படலாகாது. |

**1.5.8. தலைப்பு 810 – சட்டமும் ஒழுங்கும், நிதியும் திட்டமிடலும்,உள்ளூராட்சி, சுகாதாரம், உள்நாட்டு மருத்துவம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வியாபாரமும் உணவும், போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல்,ஊடகம், வீடமைப்பும் நிர்மாணமும், மற்றும் மதவிவகார மாகண அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | புஸ்ஸல்ல ஆரம்ப வைத்திய சிகிச்சை அலகினை நிர்மாணித்தல் 2022 பெப்ரவரி மாதம் முடிவடைந்திருந்த போதிலும், பயன்பாட்டிற்கு ஏற்ற | எதிர்காலத்தில் கிடைக்கும் நிதியின் அடிப்படையில் கட்டடத்தினைப் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது என்பது. | சொத்துக்களை பயன்படுத்தாது வைத்திருத்தல் ஆகாது. |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் தயாரிக்கப்பட்டிருக்காத காரணத்தால் செலவிடப்பட்ட ரூபா. 3,811,135 தொகை இதுவரையில் பயனற்று உள்ளது. | | |
| (ஆ) | எகலியகொட ஆரம்ப வைத்தியசாலை ஓட்டுனர் ஓய்வு அறையுடன் கூடிய அவசர ஊர்தி தரிப்பிடம் பயன்படுத்தக்கூடிய வகையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காத போது பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தம் இரத்து செய்தமையால் அதற்காக செய்யப்பட்ட ரூபா.4,098,180 பயனற்ற செலவாகி இருந்தது. | கட்டடத்தின் ஒரு பகுதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இதன் மீதி நிர்மாணம் எதிர்வரும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் என்பது. | - மேற்படி - |
| (இ) | 2023 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா.165,298,000 ஆன 32 நிர்மாண கைத்தொழில்கள் பெறுகை முறைமை இன்றி பிரதான செயலாளரின் பரிந்துரை மற்றும் ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திரவியல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. | இந்த கைத்தொழில் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது பிரதான செயலாளரின் பரிந்துரை மற்றும் கௌரவ ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் என்பது. | பெறுகை வழிகாட்டலுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதான செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் மாகாண திணைக்களத்தின் ஆகக் கூடிய பெறுகை எல்லை ரூபா 02 மில்லியனான போதிலும், அதற்கு முரணாக, ரூபா 05 மில்லியனை விஞ்சி ரூபா. 543,621,184 ஆன 40 பெறுகைகள் சுகாதார திணைக்கள பெறுகை குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தழுவு அங்கீகாரம் மற்றும் குறித்த கொள்வனவு என்பன பிரதான அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுகாதாரத் திணைக்களத்தின் பெறுகை எல்லையினை விஞ்சியமையால் பிரதான அமைச்சின் பெறுகை சபை அனுமதியினை வழங்கி உள்ளது. தற்போது சுகாதாரத் திணைக்களத்திற்கு ரூபா. 5 மில்லியன் வரையில் எல்லை கிடைத்துள்ளது என்பதனால் எதிர்காலத்தில் சிக்கல் ஏற்படாது என்பது. | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.8.1 சப்ரகமுவ அபிவிருத்தி நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்** | | |
| (i) | இருப்பு ஏட்டிக்கு அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அச்சக இருப்பின் பெறுமதியை விட ரூபா.9,155,451 அதிகமாக அத்தினத்தில் அந்த இருப்பானது நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | இருப்புக் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பது. | நிதிக் கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | சிவில் பிரிவின் முன்னேற்ற அறிக்கைக்கு அமைய, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 125 நிர்மாண செயற்திட்டங்களில் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா.57,187,500 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | - மேற்படி - |
| (iii) | வருமானக் கூற்றுக்கு அமைய 08 வருமானத் தொகுதிகளின் மீதி மற்றும் அந்தந்த பிரிவுகளின் வருமான கூற்றுக்கு அமைய அந்த மீதிகள் என்பவற்றுக்கு இடையே ரூபா.4,563,201 வேறுபாடு காணப்பட்டது. | பேரேட்டுப் பதிவுகளின் மூலம் எதிர்காலத்தில் செம்மையாக்கல் செய்யப்படும் என்பது. | - மேற்படி - |
| (iv) | கடன்பட்டோர் பட்டோலையின் பிரகாரம் கடன்பட்டோர் மீதியை விட ரூபா. 5,209,100 அதிகமாக அந்த மீதி நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | உண்மையான கடன்பட்டோர் மீதி ரூபா. 60.868,675 ஆக இருத்தல் வேண்டும் என்பது. | - மேற்படி - |
| (v) | ரூபா. 26,714,087 ஆன 03 சொத்து உருப்படிகளுக்கான அட்டவணை அல்லது கணிப்பாய்வு அறிக்கை கிடைத்திருக்கவில்லை. | ஆதாரத் தகவல்கள் மீளப் பரீட்சிப்பு செய்யப்பட்டு திருத்தப்படும் என்பது. | தேவையான சான்றுகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். |

**(ஆ) செயற்பாட்டு மீளாய்வு**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 06 கைத்தொழில்களுக்காக ரூபா. 13,919,162 தொகை மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சிவில் கைத்தொழில்களில் இலாபத்தில் 50 சதவீதம் இந்த தீர்க்கப்படாத முற்பணத்தினை தீர்ப்பதற்கு அமைச்சினால் கழிக்கப்பட்டு இருந்தது என்பது | தீர்க்கப்படாத முற்பணத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | வேலை பூர்த்தி செய்யப்பட்டதனால் ரூபா.2,168,803 ஆன பிணை வைப்பு உப ஒப்பந்தக்காரரினால் கோரப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையின் நிதி சிக்கல்கள் காரணமாக அந்தத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதி கிடைக்கும் வகையில் எதிர்காலத்தில் பிணையினை விடுவிக்கின்றேன். | பிணை வைப்பு விரைவில் விடுவிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 05 ஆண்டுகளை விட பழமையான ரூபா. 22,969,240 ஆன கடன்பட்டோர் மீதி, மொத்த கடன்பட்டோரில் 38 சதவீதமாகும். | இதற்காக “தீர்ப்பனவாளர்” ஒருவரை நியமிப்பதற்காக பிரதான செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | செலுத்தப்பட வேண்டிய வட் வரிக்காக 2023 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ரூபா. 21,305,045 பெறுமதியான 67 காசோலைகள் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடலை மேற்கொள்ளுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுவரையில் இந்த காசோலைகள் வழங்கப்பட மாட்டாது என்பது. | விதிகள் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(இ) பெறுகைகள்**

| | | | |
|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா.43,181,037 பெறுமதியான 15 ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்திருந்த போதிலும், பெறுகை வழிகாட்டி எதுவும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | குறுகிய காலத்தினுள் பல பெறுகை குழுக்களை அழைப்பதற்கு நேரிட்டதனால் குறித்த கோவையை சரியான முறையில் பராமரிக்க முடியவில்லை. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.8.2 பின்னவல இபெரணிகம தீம் பூங்கா**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பூங்கா தாபிக்கப்பட்ட சாசனத்திற்கு அமைய சப்ரகமுவ மாகாணத்தில் பாரம்பரிய புராதன கிராமம் ஒன்றில் இருக்கும் அம்சங்களைக் காட்டும் நிர்மாணங்கள், தீம் பூங்காவில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | பிரேரிக்கப்பட்ட நிர்மாணிப்புகள் வருமான நிலைமைகள் நிலைப்படுத்தப்பட்ட பின்னர் நிர்மாணிக்கப்படும் என்பது. | சாசனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.7.4 சப்ரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **செயற்பாட்டு மீளாய்வு** | | |
| (i) | சப்ரகமுவ மாகாண சபைக்கு சொந்தமான பஸ் தரிப்பிடங்கள் மற்றும் அதன் கட்டடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிமையை உறுதிப்படுத்திக் கொண்டு பெறுமதி கணக்கீடு செய்யப்படும் என்பது. | உரிமையை பெற்றுக் கொண்டு சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த இருப்பு சரிபார்ப்பு மற்றும் பேரேட்டுக் கணக்கு என்பவற்றுக்கு இடையே ரூபா. 1,284,573 வித்தியாசம் காணப்பட்டது. | திருத்தப்படும் என்பது. | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 2022 திசெம்பர் 21 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 8ய2022 கொண்ட அரச வணிக சுற்றறிக்கையின் 111 ஆம் பிரிவிற்கு அமைய மீதப்படுத்தப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தும் போது முந்தைய ஆண்டுக்குரிய இலாபம் மாகாண சபை நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதுடன் மீண்டும் செலவுகளுக்கு திறைசேரியில் இருந்து நிதி பெறப்படலாகாது. | சப்ரகமுவ வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஊழியர் சட்டவாக்கக் கோவையின் 16 ஆம் பிரிவுக்கு அமைய மீதப்படுத்திய விடுமுறையின் அடிப்படையில் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | மத்திய அரசின் சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், அந்த நிபந்தனைகளுக்கு முரணாக, 2023 ஆம் ஆண்டில் அவ்வாறான கொடுப்பனவாக ரூபா.1,569,210 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (iv) | எதிர்பார்க்கப்பட்ட திருத்த வேலை செலவு ரூபா. 1,074,200 ஆன, 2022 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளான கெப் வண்டியின் பரீட்சிப்பு அறிக்கை 2024 ஜனவரி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று, காப்புறுதியின் கீழ் இல்லாத ரூபா.594,200 இற்கான சேதத்திற்குப் பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர் இதுவரையில் இனம் காணப்பட்டிருக்கவில்லை. | ரூபா.594,000 ஐ ஏடுகளில் இருந்து நீக்குவதற்கு பிரதான செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | பரீட்சிப்பு விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (v) | பாதுகாப்பு கெமராவிற்கு ரூபா.3,441,110 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த கெமரா செயற்படாது காணப்படுகின்றது. | தற்போது அந்த கெமரா செயற்படாது காணப்படுகின்றது என்பது. | சொத்துக்களைப் பயன்படுத்தப்படாது வைத்திருத்தல் ஆகாது. |
| (vi) | அரச நிறுவனங்களில் தலைவர்களுக்கு உரித்துடைய 150 லிட்டர் எரிபொருள் அளவினை தீர்மானித்து 2022 ஜனவரி 03 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PS/SP/Circu/01/02/2020 கொண்ட ஜனாதிபதி சுற்றறிக்கைக்கு முரணாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் 2023 நவம்பர் மாதம் தொடக்கம் தலைவருக்கு ஒரு மாதத்திற்கு 300 லிட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநரின் விசேட அனுமதியின் அடிப்படையில் இந்த மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) இணங்காமை**

சப்ரகமுவ மாகாணத்தில் மாகாண சபையில் 1994 இன் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை பிரமாணத்தின்,

| | | | |
|---|---|---|---|
| (i) | 17 ஆவது பிரிவிற்கு அமைய பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் குறித்தொதுக்கப்பட முடியாத போதிலும், 2023 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டும் 197 சந்தர்ப்பங்களில் ரூபா. 19,485,000 பெறுமதியான பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வேறு நபர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டிருந்தது. | அதிகாரமற்ற மற்றும் பூச்சிய வீதி அனுமதிப் பத்திரங்கள் குறித்தொதுக்கப்படல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது. | சாசனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 25 ஆவது பிரிவிற்கு அமைய அதிகார சபையின் பதவி அணியினர் அல்லாத தலைவருக்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்காக 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் ரூபா. 535,905 செலுத்தப்பட்டிருந்தது. | அதிகார சபையில் சேவையாற்றும் அனைவருக்கும் வருமானத்தின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF) அறவிடப்பட வேண்டும் என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது என்பது. | - மேற்படி - |
| (iii) | 27(4) ஆம் பிரிவிற்கு அமைய மாகாண அதிகார சபையின் வருடாந்த இலாபத்தில் யாதேனும் சதவீதம் மாகாண சபை நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இலாபப் பங்கினை செலுத்துவதற்காக பிரதான அமைச்சிடமிருந்து அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய 14 மில்லியன் மாகாண நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (iv) | 30(2) ஆம் பிரிவிற்கு அமைய, தயாரிக்கப்பட்ட பிரமாணங்கள் மாகாண சபையில் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கும் வரையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதில்லை எனினும், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் | எதிர்காலத்தில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணம் மற்றும் வீதி பரீட்சிப்புத் தண்டம் என்பன அறவிடப்பட்டிருந்தன. | | |
| (v) | 09 மற்றும் 19 ஆம் பிரிவிற்கு அமைய, பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் இல்லாத 192 பேருந்துகளில் இருந்து ரூபா. 3,535,350 அனுமதிப் பத்திர கட்டணம் மற்றும் மேலதிக கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டி உள்ளது. | தண்டம் மற்றும் மேலதிகம் என்பன அறவிடப்படும் என்பது. | - மேற்படி - |

**(இ) வருமான முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| | 168 பேருந்துகளில் 03 வருடங்கள் பழமையான ரூபா.913,852 நிலுவை தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதே போன்று, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 119 பேருந்துகளில் இருந்து ரூபா.6,365,023 லொக் பத்திர வருமானமும், 86 பேருந்துகளில் மாகாணங்களுக்கு இடையிலான நுழைவுக் கட்டணம் ரூபா. 1,132,050 தொகையும் அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. | தண்டம் மற்றும் மேலதிகத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் லொக் பத்திர கட்டணம் ரூபா.6,365,023 மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான நுழைவுக் கட்டணம் ரூபா. 3,132,050 இன்னமும் நிலுவையாகக் காணப்படுகின்றது. | நிலுவைத் தொகையினைத் தாமதமின்றி அறவிடுதல் வேண்டும். |

**(ஈ) மனித வள முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் DMS/SG/0505 மற்றும் 2017 மே 29 ஆம் திகதி இடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு அமைய பதவிக்கான ஆட்சேர்ப்பு, ஈட்டும் வருமானத்தில் சம்பளம் செலுத்தும் அடிப்படையில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டதற்கான | 2023 பெப்ரவரி 23 ஆம் திகதியின் பின்னர் நிறுவனத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு அமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மற்றும் நிதி ஆணைக் குழுவின் அனுமதியின் அடிப்படையில் சம்பளம் செலுத்துவதற்கு பிரதான அமைச்சிடமிருந்து நிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்பது. | ஈட்டும் வருமானத்தில் சம்பளம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

சான்றுகள் காணப்படவில்லை. , அதேபோன்று அதற்கு முரணாக 2023 ஆம் ஆண்டில் அதிகார சபையில் சம்பளம் செலுத்துவதற்காக ரூபா.26,000,000 பிரதான அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**1.5.8.4 சப்ரகமுவ மாவட்டத்தின் மத்திய நூலக அரங்கு முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **இணங்காமை** | | |
| | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவை | | |
| (i) | நிதி விதி 369.4 இற்கு இணங்க, 2023 ஆம் ஆண்டில் முற்பணக் கணக்கில் ஆகக் கூடிய செலவு எல்லை ரூபா. 66,128 இனால் விஞ்சி இருந்தது. | ஆகக்கூடிய செலவு எல்லையை அதிகரிப்பதற்காக திறைசேரியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | நிதி விதி 377.1 இற்கு அமைய, முற்பகணக் கணக்கு ஆரம்பம் தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மூலதன சொத்துக்களின் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா. 6,769,793 தொகை தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வருடம் தொடக்கம் குறித்த வகையில் ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் என்பது | - மேற்படி - |
| (iii) | நிதி ஒதுக்கீட்டுக் கணக்கில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி காணப்பட்ட ரூபா.3,191,817 வரவு மீதியை தீர்ப்பதற்கு நிதி விதி 380.2 (இ) இற்கு அமைய கூடுதல் நிதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வருடத்தில் திருத்தப்படும் என்பது. | - மேற்படி - |

**1.5.7.5 சப்ரகமுவ மாகாணத்தின் வீடமைப்பு அபிவிருத்தி நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியம் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படாது இருந்ததுடன் அந்த ஆண்டு தொடக்கம் ரூபா. 292,959 தொகை இதுவரையில் பயன்பாட்டின்றி காணப்படுகின்றது. | மாகாண சபை கலைக்கப்பட்டதனால் பொறுப்பு சபை ஒன்று நியமிக்கப்பட்டு இருக்காததால் நிதியம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்பது. | நிதியம் தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். |

**1.5.9. தலைப்பு 811 – மாகாண சுகாதார திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கஹவத்தை ஆரம்ப வைத்தியசாலைக்கு நோயாளரைப் பதிவு செய்தல் நடவடிக்கைக்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கிடைத்த 05 பிரிண்டர்கள் மற்றும் 25 ஸ்கேனர்கள் பயன்பாடின்றி காணப்படுவதுடன் அதற்காகக் கிடைத்த 25 மடிக்கணினிகள் அந்த பணிகளுக்காகப் பயன்படுத்தப்படாது பதவியணி உத்தியோகத்தர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்த வேலைத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கலாகாது என்பதுடன் எதிர்பார்க்கபபட்ட பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களைப் பதிவு செய்தல் சட்டத்துக்கு அமைய தனியார் சுகாதார சேவை ஒழுங்குறுத்தல் சபையிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பதிவு செய்தல் பத்திரம் இன்றி தனியார் சுகாதார நிறுவனங்களைத் தாபிப்பதற்கு அல்லது நடாத்திச் செல்வதற்கு முடியாது. எனினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மாகாணத்தினுள் அவ்வாறான பதிவு செய்தல் இன்றி 34 தனியார் வைத்திய நிறுவனங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றன. | இது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கும் அதிகாரமுடைய நிறுவனம் கொழும்பு தனியார் சுகாதார சேவை ஒழுங்குறுத்தல் சபை என்பது. | அதிகார சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொடகவெல பிரதேச வைத்தியசாலையில் ரூபா.3,411,683 செலவில் 2021 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட எக்ஸ்ரே அறை நிர்மாணிக்கப்பட்ட நாள் தொடக்கம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் வேறு வைத்தியசாலையில் இருந்து கிடைத்த 02 எக்ஸ்ரே இயந்திரங்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் கிடைத்த ஜெனரேட்டர் என்பன கிடைத்த நாள் தொடக்கம் பயன்பாடின்றி காணப்படுகின்றன. | எக்ஸ்ரே அறையானது எக்ஸ்ரே இயந்திரங்கள் கிடைக்கும் வரை பயன்பாடின்றி காணப்பட்டது. | சொத்துக்களைப் பயன்பாடின்றி வைத்தல் ஆகாது. |
| (ஈ) | ஆரம்ப சுகாதார சேவையை வலிமையூட்டும் செயற்திட்டத்தின் (PSSP) பிரதான நோக்கமான இணைய சுகாதார முகாமைத்துவ கணினி தகவல் ஒழுங்கமைப்பை 04 வைத்தியசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண சுகாதார அமைச்சினால் 2021 - 2023 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் ரூபா. 9,256,591 ஆன 75 Barcode Scanner, 25 Barcode Printers மற்றும் 04 Servers என்பன 2024 பெப்ரவரி வரையிலும் பயன்பாடு இன்றி காணப்பட்டது. | எம்பிலிபிட்டிய வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எகலியகொட வைத்தியசாலையில் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 02 வைத்தியசாலைகளில் செயல்படுத்தப்படவில்லை என்பது. | - மேற்படி - |
| (உ) | இரத்தினபுரி மருத்துவ விநியோக பிரிவின் மூலம் கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதும் மருத்துவ விநியோகப் பிரிவினால் அனுப்பப்பட்டிருந்த ரூபா. 4,857,000 ஆன 60,000 Surgical Gloves ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | களஞ்சியசாலை இட வசதி இல்லாததால் பிரதேச களஞ்சியசாலைகளுக்கு விநியோகிக்குமாறு கொழும்பு மருத்துவ விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டது என்பது. | தேவையான எண்ணிக்கையை மட்டும் ஏற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சுகாதாரப் பதவியணி விஸ்தரிப்பில் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பது பின்வரும் விடயங்களுக்கு அமைய உறுதியாகின்றது. | | |
| (i) | வைத்தியசாலைகள் உள்ளிட்ட 28 சுகாதார நிறுவனங்களில் வைத்தியர் பதவிக்கான 108 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 26 நிறுவனங்களில் அந்தப் பதவி 50 மேலதிகமாகக் காணப்பட்டன. 21 நிறுவனங்களில் தாதி உத்தியோகத்தர் பதவிக்கான 154 வெற்றிடங்கள் காணப்பட்ட போது 25 நிறுவனங்களில் அந்த பதவி 59 மேலதிகமாகக் காணப்பட்டது. | இந்த உத்தியோகத்தர்களை இணைக்கும் அதிகாரம் நிரல் அமைச்சுக்கு உரியது என்பது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதுடன் மேலதிகம் மற்றும் வெற்றிடம் சீராக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | இரத்தினபுரி மாவட்டத்தில் 04 ஆரம்ப வைத்தியசாலைகளில் 10 விசேட மருத்துவர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. அதே போன்று, மாவனல்ல ஆரம்ப வைத்தியசாலையில் அந்தப் பதவிகள் 02 வெற்றிடமாக உள்ளதுடன் கரவணல்ல மற்றும் வரக்காபொல ஆரம்ப வைத்தியசாலைகளில் அந்த பதவி 01 வீதம் மேலதிகமாகக் காணப்படுகின்றது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | இரத்தினபுரி மாவட்டத்தில் 05 ஆரம்ப வைத்தியசாலைகளில் 04 வைத்தியசாலைகளிலுமே மருத்துவ அதிகாரி பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iv) | மாகாணத்தில் A - தொகுதியில் பிரதேச வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 10-18 இற்கு இடையிலான வீச்சில் காணப்படுகின்றது எனினும் இரம்புக்கென பிரதேச வைத்தியசாலையில் அங்கீகரிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 42 எனும் அசாதாரணமான எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. | தாதி உத்தியோகத்தர் பதவிகள் 29 அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது. | மீளாய்வு செய்து திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | ஆரம்ப சுகாதார சிகிச்சை அலகிற்கு மருத்துவ உத்தியோகத்தர்களை இணைக்கும் போது நாளாந்த சாதாரண நோயாளர்களின் எண்ணிக்கை 03 ஆக உள்ள ஒரு அலகிற்கு மருத்துவ உத்தியோகத்தர் 02 பேரும், அவ்வாறான நோயாளர்கள் 24 பேர் மற்றும் 86 பேரைக் கொண்ட 02 அலகிற்கு மருத்துவ உத்தியோகத்தர்கள் 03 பேர் வீதமும், நாளாந்த சாதாரண நோயாளர்கள் 48 பேர் வருகை தரும் ஒரு அலகிற்கு மருத்துவ உத்தியோகத்தர் 04 பேரும் இணைக்கப்பட்டிருந்தனர். | இந்த உத்தியோகத்தர்களை இணைக்கும் அதிகாரம் நிரல் அமைச்சிடம் உள்ளது. | மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு திருத்தப்படுதல் வேண்டும். |
| (vi) | 2024 ஏப்ரல் 30 ஆம் திகதியான கணக்காய்வு தினத்தில் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் அமைந்துள்ள 107 ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிலையங்களில் தாதி பதவிகளும், 85 அலகுகளில் வைத்திய உத்தியோகத்தர் பதவிகளும், 68 அலகுகளில் மருந்து கலவையாளர் பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் இணக்கப்பாடு கிடைக்கவில்லை என்பது. | பதவிகளுக்கான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (எ) | மாகாண திணைக்கள பெறுகை சபையின் நிதி எல்லையான ரூபா 02 மில்லியனை விஞ்சி 03 சந்தர்ப்பங்களில் ரூபா. 10,316,412 க்கு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் இத்தகைய கொள்வனவு தவறானது என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | அதற்காக ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது. | விதிகள், சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | எகலியகொட ஆரம்ப வைத்தியசாலையில். ரூபா. 836,138 ஆன 28 DIFF LYSE Reagent போத்தல்களில் குறைவு ஏற்பட்டு 02 வருட காலம் கடந்திருந்த போதிலும், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணை சபையின் தீர்மானத்திற்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது | ஏற்பட்ட நட்டத்தினை பொறுப்புக் கூற வேண்டிய நபர்களிடம் இருந்து அறவிடுதல் வேண்டும். |

### 1.5.10. தலைப்பு – 812 - மாகாண ஆயுர்வேத திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் வைத்தியசாலை வளாகத்தினுள் மூலிகைத் தோட்டங்களை ஆரம்பிப்பதனால் வைத்தியசாலைகளின் மருந்து தேவைப்பாட்டினை பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாக இருக்கும் எனினும், பனாவல, இறக்குவானை, எம்பிலிபிட்டிய, வல்கம மற்றும் ஆயுர்வேத திணைக்களம் என்பன அந்தப் பணியினை சரியான முறையில் நிறைவேற்றி இருக்கவில்லை. | பாரிய ஊழியர் தட்டுப்பாடு காணப்படுகின்றது என்பதனால் மூலிகைத் தோட்டம் சிறந்த முறையில் செயல்படவில்லை எனினும் பயிரிடப்படக்கூடிய மூலிகைகள் ஓரளவு மட்டத்தில் பயிரிடப்படுகின்றது என்பது. | மூலிகை பயிர் செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எம்பிலிபெட்டிய ஆயுர்வேத வைத்தியசாலை அமைந்துள்ள மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணி மற்றும் சுமார் 06 ஏக்கர் அளவிலான காணியில் அமைந்துள்ள இறக்குவானை வைத்தியசாலையின் காணி என்பன கையகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | கையகப்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பது. | காணி உரிமையினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கேகாலை ஆயுர்வேத வைத்தியசாலைக்குச் சொந்தமான 2020 ஆம் ஆண்டில் வேலைகள் முடிவடைந்த ரூபா.66,886,932 பெறுமதியான கட்டணம் செலுத்தும் வாட்டினைக் கொண்ட கட்டிடம் 2024 ஜனவரி மாதம் வரையிலும் பயன்பாடு இன்றி காணப்பட்டது. | தேவையான உபகரணங்கள் மற்றும் மனித வள சிக்கல் காரணமாக கட்டணம் செலுத்தும் வாட்டு ஆரம்பிப்பதற்கு தாமதம் அடைந்த போதிலும், இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும் என்பது. | சொத்துக்கள் பயன்பாடு இன்றி வைத்தல் ஆகாது. |
| (ஈ) | எம்பிலிபிட்டிய ஆயுர்வேத வைத்தியசாலையில் 2023 ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட கட்டணம் செலுத்தும் வாட்டுத் தொகுதி ஆரம்பத்தில் இருந்து 04 மாத காலத்தினுள் இரு நோயாளர் மட்டுமே சிகிச்சை பெற்றிருந்ததனால் இந்த கட்டடம் மற்றும் உபகரணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 86 மில்லியன் பலனுடைய செலவாக இருக்கவில்லை. | அறவிடப்படும் விலை காரணமாக நோயாளர்களின் வருகை குறைவடைந்துள்ளது என்பது. | - மேற்படி - |
| (உ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 633 பேரில் 201 வெற்றிடங்கள் மற்றும் 33 பேரின் மேலதிகம் காணப்பட்டது. அதே போன்று, அங்கீகரிக்கப்படாத 13 பதவிகளுக்காக 124 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர். | ஆட்சேர்ப்பு செய்வதற்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதுடன் மேலதிகம் மற்றும் வெற்றிடம் சீராக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கடமைப் பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்காக மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் நியமனம் வழங்கப்பட வேண்டும். எனினும், மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்குத் தெரியப்படுத்தாது ஆயுர்வேத ஆணையாளரினால் 12 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | இதற்கு ஒழுங்கான வேலைத்திட்டம் ஒன்று காணப்படாததுடன் ஏனைய மாகாண சபைகளின் நடைமுறைகள் மற்றும் நாவின்ன ஆயுர்வேத திணைக்களத்தின் நடைமுறை என்பவற்றுடன் இணைந்து சப்ரகமுவ மாகாணத்திற்கு நடைமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது. | ஆட்சேர்ப்பு ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.10.1. பின்னவல பஞ்சகர்ம பிரிவு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பஞ்சகர்ம பிரிவு அமைந்துள்ள இடமானது அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் யானைகள் சரணாலயம், உயிரியல் பூங்கா மற்றும் புராதன தீம் பூங்கா என்பவற்றை பார்வையிடுவதற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் பார்வைத் தலமான போதிலும், நிறுவனத்தின் மோசமான பராமரிப்பு, போதிய அளவில் ஊழியர் இல்லாமை மற்றும் விளம்பரப்படுத்தாமை காரணமாக நாளொன்றுக்கு உள்நாட்டவர் இருவர் மற்றும் வருடத்திற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மூவர் மட்டுமே சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர். | நிறுவனம் தொடர்பில் விளம்பர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு தற்போது இணைய தளம் இல்லாததுடன் எதிர்காலத்தில் நிதி ஒதுக்கப்படுவதன் மூலம் பஞ்சகர்ம பிரிவிற்கு விசேட இணைய தளத்தினை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்பது. | நிறுவனம் தாபிக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.11. தலைப்பு 813 – மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2000 - 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினுள் 12 கூட்டுறவு சங்கங்களுக்குப் பெற்று கொடுத்திருந்த கடன்களில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 11,383,326 ஆன கடன் அறவிடப்பட வேண்டி இருந்தது. | நிலுவை வட்டியினை நீக்குவதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல், கடன் தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கடன் அறவிடப்பட்டு வருகின்றது என்பது. | கடனை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியம், தீர்வு நிதியம் மற்றும் முடிவு நிதியத்தில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் வங்கிக் கூற்றுக்கு அமைய வங்கி மீதி ரூபா.58,647,672 ஆக இருந்ததுடன் | சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் மாகாண சபை தாபிக்கப்பட்டு இருக்காத காரணத்தால் அங்கீகரித்துக் கொள்ள முடியாது இருந்தது என்பது. | சட்டங்களை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

நிதியத்திடம் ரூபா.124,930,851 ஆன நிலையான வைப்பு காணப்பட்டது. இந்த நிதியத்தின் நிர்வாகத்திற்காக தயாரிக்கப்பட்ட சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. நிதியங்களில் ஆரம்பத்தில் இருந்து இதுவரையில் கணக்கு தயாரிக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் இந்த மீதி மாகாண சபை நிதியக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.5.12. தலைப்பு இலக்கம் - 814 - உள்ளூராட்சி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வரகாபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா. 129,600 மேலதிகத்திற்கு இதுவரையில் 03 வருடங்கள் கடந்துள்ள போதிலும், மேன்முறையீட்டு தீர்மானம் கிடைக்கவில்லை என்பதனால் மேலதிகம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேன்முறையீட்டு தீர்மானம் கிடைக்கும் வரையில் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு முடியாது உள்ளது என்பது. | மேன்முறையீட்டு தீர்மானம் கிடைப்பது தாமதமடைதல் தொடர்பில் கண்டறிதல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் xiv ஆம் அத்தியாயத்தின் 12.1 ஆம் பிரிவிற்கு முரணாக, ஒரே காலப் பகுதிக்காக ரூபா. 131,885 மாற்றப்பட்ட பயணக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக இணைந்த படிகள் மற்றும் எரிபொருள் செலவாக ரூபா. 598,555 உம் மாகாண நிர்வாக ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மாற்றப்பட்ட பயண செலவு, கௌரவ ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில், பிரதான செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள இலக்கம் பீ.எஸ்.07/04/01/01 மற்றும் 2019.10.24 ஆம் திகதி இடப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ளது என்பது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்காக வருமான சேகரிப்பு திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்காததுடன் 17 மாகாண நிர்வாக நிறுவனங்களின் நிலுவை வருமானம் அறவிடப்படுவதன் முன்னேற்றம் 50 சதவீதத்திலும் குறைவாகக் காணப்பட்டது. | இரத்தினபுரி மற்றும் கேகாலை உதவி மாகாண நிர்வாக ஆணையாளர்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது. | நிலுவை வருமானம் அறவிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலக்கம் 33/2017 மற்றும் 2017 திசெம்பர் 07 ஆம் திகதி இடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய, மாகாண அரச சேவையின் கள உத்தியோகத்தர் தொகுதியில் மாகாண நிர்வாக திணைக்களத்தின் பொறியியலாளர் பதவி உள்ளடக்கப்படவில்லை. அதே போன்று, மாற்றப்பட்ட பயண செலவு உரித்துடைய பதவியாக மாகாண சபையும் இந்த பதவியினை இனம் கண்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்த போதிலும், 2021-2023 ஆம் ஆண்டு காலத்திற்காக மாகாண நிர்வாக பொறியியலாளருக்கு மாற்றப்பட்ட பயணச் செலவாக ரூபா.180,020 செலுத்தப்பட்டிருந்தது | மாற்றப்பட்ட பயணச் செலவு, கௌரவ ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில், பிரதான செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள இலக்கம் பீ.எஸ்.07/04/01/01 மற்றும் 2019.10.24 ஆம் திகதி இடப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ளது என்பது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைக்கு இணங்க செயல்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காணப்பட்டன. | | |
| | (i) தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ உதவி மத்திய நிலையத்துடன் எதுவி தொடர்பும் பேணப்பட்டு இருக்கவில்லை.<br><br>(ii) எந்த ஒரு மாகாண நிர்வாக நிறுவனமும் திண்மக் கழிவு முகாமைத்துவ தரவு ஒழுங்கமைப்பொன்று இருக்கவில்லை.<br><br>(iii) ஐந்து வருட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | விஞ்ஞான ரீதியான திட்டமிடல் மற்றும் விஞ்ஞான ரீதியிலான திண்மக் கழிவு முகாமைத்துவ அறிவு போதிய அளவில் இல்லாத காரணத்தால் மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கு அந்த திட்டத்தினைத் தயாரித்தல் கடினமாக இருந்தது. மாகாண நிர்வாக அமைச்சிடமிருந்து தேவையான தொழில்நுட்ப உதவி பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் என்பது. | கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 08 மாகாண நிர்வாக நிறுவனங்களில் 2023 நவம்பர் வரையில் விற்பனை செய்ய முடியாத 6,001,815 கிலோ கிராம் உரம் களஞ்சியசாலையில் தேங்கி உள்ளது. இதற்குத் | உர செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்தல் தொடர்பில் அனைத்து மாகாண நிர்வாக நிறுவன தலைவர்களும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளனர் | தர உத்தரவாதத்தினைப் பெற்றுக் கொண்டு இயற்கை உரத்தினை விற்பனை |

| | | | |
|---|---|---|---|
| | தீர்வாக இயற்கை உரத்திற்கான சந்தையொன்றினை உருவாக்குவதற்காக தர உத்தரவாதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உர செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், மாகாண நிர்வாக நிறுவனங்கள் எதுவும் உர செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அந்த உரத்தினை விற்பனை செய்வதற்குத் தேவையான வழிவகை மேற்கொண்டு இருக்கவில்லை. | என்பது. அதற்கமைய போதிய அளவு இயற்கை உரம் உற்பத்தி செய்யும் மாகாண நிர்வாக நிறுவனங்கள் பல உர செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.13. தலைப்பு இலக்கம் - 820 – மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டும் இளைஞர் விவகாரமும் மாகாண அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | விநியோகிக்கப்பட்ட கோலாஸ் தொகையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பரீட்சிப்பு செய்யப்பட்டு அவை அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப விபரக் குறிப்புகளுக்கு இணங்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், அதற்காக ரூபா.5,319,900 ஆன முழுமையான தொகையும் விநியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | உரிய பொறியியல் ரீதியான பரிந்துரைகளின் அடிப்படையில் விலைப்பட்டியலுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என்பது. | தீர்மானிக்கப்பட்ட தொழில்நுட்ப விவரக் குறிப்புகளுக்கு இணங்க கொள்வனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.5.14. தலைப்பு 821 – மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண விளையாட்டு நியதிச் சட்டத்திற்கு அமைய மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச விளையாட்டு சபைகளைத் தாபித்தல், விளையாட்டு நிதியக் கணக்கினை பேணுதல், விளையாட்டு சங்கங்களைப் பதிவு | மாகாண சபை கலைக்கப்பட்டதனால் விளையாட்டு அமைச்சர் இல்லை என்பதனால் நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது. | நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல், விளையாட்டு புலமைப் பரிசில் மற்றும் விளையாட்டு நிபுணத்துவ நிறுவனங்களை அமைத்தல் ஆகிய பணிகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 47 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் மற்றும் 2020 - 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் சர்வதேச போட்டிகளில் திறமையினை வெளிப்படுத்திய விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை சிறப்பிப்பதற்கு பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு 100x4 ரிலே ஓட்டம் (ஆண்கள்) போட்டியில் ஆகக் கூடிய திறமையினை வெளிப்படுத்திய போட்டியாளர்களை ஈடுபடுத்த குழு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும் போட்டியாளர்களின் திறமையை சிறப்பிக்கும் போது தேசிய விளையாட்டு விழாவில் பதக்கத்தினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றியினை பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான முறையற்ற செயல்பாடுகள் இடம்பெறுதல் மாகாண விளையாட்டு அபிவிருத்திக்கும் அந்த திணைக்களத்தின் நற்பெயருக்கும் கேடு விளைவிக்கும் என்பதனால் அமைச்சு செயலாளரினால் இது தொடர்பில் பரீட்சிப்பு செய்வதற்கு ஆரம்ப விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பது. | விளையாட்டுப் போட்டியில் பொருத்தமான போட்டியாளர்களை ஈடுபடுத்துவதற்கு குழு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.15. தலைப்பு 830 – சமூக நலன்புரி, நன்னடத்தைகளும் சிறுவர் பாதுகாப்பும், கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் மாகாண அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி தச்சுப் பாடசாலைக்கு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான 04 ஆண்டுகளில் 04 மாணவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த 04 மாணவர்களும் பாடநெறியைக் கைவிட்டு சென்றிருந்தனர். திபொல்கெட்டிய தச்சுப் பாடசாலைக்கு 2020 - 2023 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலப் பகுதியில் 11 மாணவர்கள் ஆட்சேர்ப்பு | மாணவர்கள் பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பிரதேச செயலாளர் அலுவலகங்களில் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக எழுத்து மூலம் மற்றும் வாய்மொழி மூலம் தெளிவுபடுத்தல் செய்யப்பட்டுள்ளது என்பது. | தச்சுப் பாடசாலைக்கு மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், அவர்களை பாடநெறி இறுதி வரையிலும் தடுத்து வைப்பதற்கும் பொருத்தமான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 04 மாணவர்கள் பாடநெறியைக் கைவிட்டு சென்றிருந்தனர். தச்சுப் பாடசாலைக்கு மாணவர்களை ஈர்ப்பதற்கு மற்றும் அவர்களைத் தடுத்து வைப்பதற்கான முறைமைகள் திணைக்களத்திடம் காணப்படவில்லை. | | |
| (ஆ) | இரத்தினபுரி தச்சுப் பாடசாலைக்கு ரூபா.556,661 ஆன 03 உற்பத்திக் கட்டளைகள் மட்டும் 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்தன. திபொல்கெட்டிய தச்சுப் பாடசாலைக்கு 2020, 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ரூபா. 112,890 ஆன 03 கட்டளைகள் மட்டும் கிடைத்திருந்தன. பேரகெட்டிய, அட்டவக்வல மற்றும் கால்ல ஆகிய அரச தச்சுப் பாடசாலைகளில் 2023 ஆம் ஆண்டில் எதுவிதமான உற்பத்தியோ அல்லது விற்பனையோ இடம்பெற்றிருக்கவில்லை. திணைக்களத்தினால் தச்சுப் பாடசாலைகளை செயற்படும் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு மற்றும் மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஒழுங்கான வழிமுறை அல்லது திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபை நிறுவனங்களுக்கு மர உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் போது இந்தத் திணைக்களத்திற்கு அனுப்புமாறு கோரி கடிதம் ஒன்று பிரதான செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | தச்சுப் பாடசாலைகளை செயல்படும் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு மற்றும் மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்யப் பொருத்தமான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் வேண்டும். |
| (இ) | எகலியகொட கைவினை நிறுவனம் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணி கையகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | ஒப்படைக்கமாறு கோரப்பட்டுள்ள போதிலும் ஒப்படைக்கப்படவில்லை என்பது. | காணியின் உரிமையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | ஜனசலு நிறுவனங்களில் உள்ள பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்கள் 50 வயதுக்கும் 89 வயதிற்கும் இடைப்பட்ட வயதில் காணப்படுவதனால், புதிய தொழில்நுட்ப வல்லுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான | புதிய தொழில்நுட்ப வல்லுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஊடான தெளிவுபடுத்தல் வேலைத் திட்டங்களில் பங்கேற்று | புதிய தொழில்நுட்ப வல்லுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேம்பாட்டு வேலைத் திட்டம் ஒன்று காணப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் கைத்தறி கைத்தொழிலை பேணிச் செல்லுவதில் ஆபத்து காணப்படுகின்றது. | தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்பது. | |
| (உ) | ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு உரித்துடைய ரூபா. 478,409 ஐ அவருக்கு வழங்காது கையில் தடுத்து வைத்திருந்தமை தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைச்சின் கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் நிதி உதவியாளர் ஒழுங்காக கவனத்தில் செலுத்தாததால் முறையான பரீட்சிப்பு 2024 ஏப்ரல் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது. | ஒழுங்கான பரீட்சிப்பு விரைவில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.5.15.1. மாகாண சமூக சேவை நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியம் தாபிக்கப்பட்ட நியதிச் சட்டத்திற்கு அமைய 1994 ஆம் ஆண்டு நிதியத்துக்காக பிரமாணங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் இலக்கம் 04, 06, 15 மற்றும் 24 கொண்ட பிரமாணங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.16 தலைப்பு 831 - மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டலுக்கு முரணாக, தேவையான விபரக் குறிப்புகள் தெளிவாக விலைமனு ஆவணங்களில் காட்டப்படாமல் மதிப்பீடு செய்யப்பட்ட மூலப் பொருட்களில் 81 சதவீதம் அதாவது ரூபா.33,599,200 கொள்வனவு செய்யத் தகாததாக இருந்தது. | எதிர்காலத்தில் பெறுகைகள் வழிகாட்டல் கோவைக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு உரிய தொழில்நுட்பக் குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பது. | பெறுகைகள் வழிகாட்டல் கோவைக்கு அமைய கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.16.1. கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாததால் செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா. 639,996 ஆண்டுக்குரிய செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மொத்த பணிக்கொடைத் தொகையில் 25 சதவீதம் வருடாந்தம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது. | பணிக்கொடைக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முறையான அனுமதி இன்றி ரூபா. 26,328,586 இற்கான 63 பேரேட்டுக் குறிப்பு இடப்பட்டிருந்தது. | இந்த அனைத்து குறிப்புகளையும் ஏற்றுக் கொண்டு தலைவர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களினால் கையொப்பமிடப்பட்டிருந்தது என்பது. | பேரேட்டு குறிப்புகளுக்காக முறையான அனுமதி இருத்தல் வேண்டும். |
| (இ) | பலவின்ன முன்செய்த கொங்கிரீட் செயற்களத்திற்கு உரியதான 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாத 01 வருடத்திற்கும் அதிகமான ரூபா. 2,997,330 ஆன கடன் மீதி காணப்பட்டது. | இந்தக் கடனை அறவிடுவதற்கு வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது. | நிலுவைக் கடனை விரைவில் அறவிடுதல் வேண்டும். |
| (ஈ) | பலவின்ன முன் செய்த கொங்கிரீட் செயற்களத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு 2022 ஏப்ரல் மாதம் காணப்பட்டமூலப்பொருள் விலையினை அடிப்படையாகக் கொண்டு அலகொன்றின் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>தற்போது 1½ வருடங்கள் கடந்திருந்த போதிலும், மீண்டும் விலை திருத்தம் செய்யப்படாது பழைய விலைக்கே பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. | 2024 ஜூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் உற்பத்திகளின் விலை மீளவும் தீர்மானிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது. | விலைத் திருத்தங்கள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | பலவின்ன முன் செய்த கொங்கிரீட் செயற்களத்தில் உற்பத்தி செயற்பாட்டினை வினைத்திறனாக பேணிச் செல்லுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்த 1½ | இந்த இரு இயந்திரங்களும் திருத்தப்பட்டு பயன்படுத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலையான சொத்துக்கள் சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பை சீமந்து கொங்கிரீட் கலவை இயந்திரம் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் செயலிழந்து இருந்ததுடன் 2022 ஜனவரி மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா.960,000 பெறுமதியான ஹொப்பருடனான கொங்கிரீட் கலவை இயந்திரமும் செயலிழந்து ஒரு வருடத்திற்கு அதிகமான காலம் கடந்திருந்தது. | | |

**1.5.16.2. ஆடைக் கைத்தொழில் நிலையங்களை உருவாக்குதலும் நிருவகித்தலும்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **இணங்காமை** | | |
| | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவை | | |
| (i) | நிதி விதி 377.1 இற்கு அமைய 2011 - 2023 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு உரிய ரூபா. 45,010,863 தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கணக்கில் நிதி நிலைமை சீரானதன் பின்னர் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | நிதி விதி 378.2 இற்கு அமைய, 2016-2023 ஆம் ஆண்டு காலத்திற்கு உரிய ரூபா.27,484,016 ஆன திரண்ட தேறிய லாபம், மாகாண சபை நானாவித வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | நிதி விதி 380.2 (இ) இற்கு அமைய 2021 ஆம் ஆண்டில் இலாபக் கணக்கில் காணப்பட்ட ரூபா.2,448,102 நட்டத்தினைத் தீர்ப்பதற்கு குறைநிரப்பு ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு 2023 ஆம் ஆண்டிலும் முடியாது இருந்தது. | செயற்படு நட்டத்தினை நீக்குவதற்காக ஒதுக்கீடு கோரப்பட்டு உள்ளதுடன் இதுவரையில் அதற்கு ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்பது. | - மேற்படி - |

### 1.5.16.3. சிறு கைத்தொழில் நிலையங்களை உருவாக்குதலும் நிருவகித்தலும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தெரிவு செய்யப்பட்ட மென் பொறியியல் மத்திய நிலையங்கள் மற்றும் தச்சுப் பாடசாலைகளில் பயிற்சியினைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு NVQ சான்றிதழை வழங்குவதற்கு மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு இணங்கி இருந்தது. எனினும், அந்தக் குழுவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகளைத் திருத்தாததனால் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றிதழை ்ப பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | NVQ தகைமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது என்பது. | அளவுகோல்களை பூரணப்படுத்தி குறித்த ஏஞு சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சப்ரகமுவ மாகாண நிதி விதி கோவை - 2008 இல் நிதி விதி 377.1 இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுக்கு உரிய மூலதன சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா.1,431,146 தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | தேய்வு பெறுமதியை இந்த வருடத்தினுள் அனுப்புகின்றேன். | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.17. தலைப்பு 832 - மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாணத்தினுள் 98 பகல் நேர பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைந்துள்ள போதிலும், திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்த மத்திய நிலையங்கள் 17 மட்டுமே ஆகும். | பகல் நேர பாதுகாப்பு மத்திய நிலையங்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கிடைப்பதுடன் பரீட்சிப்பு செய்து பதிவு செய்யப்படும் என்பது. | மத்திய நிலையங்களைப் பதிவு செய்தல் மற்றும் கண்காணிப்பு என்பன மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா. 1,973,400 ஆன 143 கேட்கும் கருவிகள் மற்றும் 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 5,561,100 ஆன 44 ஊன்றுகோல்கள், 98 கொமட் சக்கர நாற்காலிகள், 04 சக்கர நாற்காலிகள், 22 கொமட் நாற்காலிகள், 84 நடைப்பயிற்சி சட்டகங்கள், 63 கைத்தாங்கல்கள் மற்றும் 72 காற்று மெத்தைகள் என்பன 2024 மார்ச் வரையிலும் களஞ்சியசாலையில் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | விண்ணப்பித்த நபர்களுக்கு இன்னமும் தேவைப்பாடுகள் உள்ளதா என்பதை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பொருட்கள் வழங்கப்படும் என்பது. | தேவையானவர்களுக்கு உடனடியாக அந்தப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 02 பிரதேச அலுவலகங்களுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான வாடகை. ரூபா. 539,000 தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | மிகவும் பொருத்தமான மாற்றாக இந்த கட்டடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பது. | அரச நிறுவனம் ஒன்றில் அலுவலகத்தை நடத்துவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். |

### 1.5.18. தலைப்பு 840 – கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார அலுவல்கள் மாகாண அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கே/தெகி/யோகம ஆரம்ப வித்தியாலயத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 7,618,337 ஆன ஆய்வு கூடம் ஒன்றை நிர்மாணித்தல் இடை நடுவில் கைவிடப்பட்டதனால் ஆய்வுகூட உபகரணங்கள் பெட்டிகளில் அடைத்து வைப்பதற்கு நேரிட்டுள்ளது. | இந்தக் கட்டடத்தின் மீதி வேலைகளை இந்த வருடத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பது. | நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் (PSDG) கீழ் ஆரம்பக் கல்விக்குத் தேவையான கட்டடம் மற்றும் நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளில் ரூபா. 19,919,150 செலவிடப்பட்டு | நிர்வாக நடவடிக்கைகளுக்கு வலய அலுவலகம், திணைக்களம் மற்றும் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதனால் அதற்காக அந்த உபகரணங்கள் கொள்வனவு | தீர்மானிக்கப்பட்ட பணிகளுக்காக வழங்கப்படும் நிதி அந்தப் பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கல்வி அலுவலகத்திற்குத் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா.4,794,375 ஆன உபகரணங்கள் மாகாணக் கல்வி அமைச்சின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட்டுள்ளது என்பது. | எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கே/தெகி/மாலிபொட தமிழ் வித்தியாலயத்தில் ஈ பட்டறை ரூபா 2,122,590 செலுத்தி 2022 ஏப்ரல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அது பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | இவ்வாறான நிலைமைகள் ஏற்படாது இருப்பதற்கு அதிபர்கள் தெளிவுபடுத்தப்படும் வகையில் வலயப் பணிப்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | கட்டடத்தினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கடந்த 03 வருட காலத்தினுள் ஊழல் மோசடி தொடர்பாக கிடைக்கப் பெற்ற 68 ஒழுக்காற்று முறைப்பாடுகளில் 20 முறைப்பாடுகள் கிடைத்த தினம் தொட்டு ஒரு வருடத்திற்கும் அதிகமா காலம் கடந்து இருந்த போதிலும், முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த முறைப்பாடுகளைப் பரீட்சிப்பு செய்து அறிக்கை வழங்குவதற்காக அந்தந்த வலய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது. | ஒழுக்காற்று முறைப்பாடுகள் தாமதமின்றி முடிவுறுத்தப்பட வேண்டும். |
| (உ) | தாபன விதிக் கோவை II ஆம் தொகுதியில் XLVII ஆம் அத்தியாயத்தில் 21.1 ஆம் பந்திக்கு முரணாக, கே/மாவ/ஹிரிவடுன்ன மகா வித்தியாலயத்தில் நூலகர் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து இருந்த போதிலும், முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | தாமதத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்கு முறைப்பாட்டு விசாரணை உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | தாபன விதி கோவையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.5.18.1 சப்ரகமுவ முன்பள்ளி கல்வி அபிவிருத்தி அதிகார சபை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | முன்பள்ளிகளைப் பதிவு செய்தல் அதிகார சபையின் முக்கிய பணியாக இருந்த போதிலும், 1481 முன் பள்ளிகளில் 495 முன் பள்ளிகளின் பதிவுகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முன் பள்ளிகளுக்கான மூலப்பிரமாணங்களைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இற்றைப்படுத்ததுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பது. | பதிவு செய்யப்படாத முன் பள்ளிகளைக் கண்டறிந்து இற்றைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | யுனிசெப் அமைப்பின் அனுசரணையுடன் முன்பள்ளி மாணவர்களுக்கு பகல் உணவு வழங்கும் வேலைத் திட்டம் - 2023 | | |
| (i) | ஊட்டச்சத்து ஆதாரம் தேவைப்படும் 161 முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் 33 பாடசாலைகள் அந்த வேலைத் திட்டத்தினைச் செயல்படுத்தி இருக்கவில்லை. | முன்னுரிமைக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட பல பாடசாலைகளுக்கு எதிர்காலத்தில் உணவு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது. | ஊட்டச்சத்து ஆதாரம் தேவைப்படும் பாடசாலைகள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். |
| (ii) | உணவு வழங்கப்படுவதைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் போதிய அளவு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதாவது, குறிக்கப்பட்ட பட்டியலுக்கு அமைய உணவு வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. உணவு விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவு தாமதமடைதல், குறித்த பட்டியலுக்கு அமைய உணவு வழங்குவதில் மற்றும் உணவின் தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. | உரிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பட்டியல் பரீட்சிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | வழங்கப்படும் உணவு தொடர்பில் போதியளவு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேணடும். |

**1.5.18.2. மெனேரிபிடிய மற்றும் அட்டளுகம கல்வி அபிவிருத்தி மத்திய நிலையம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அட்டுளுகம அபிவிருத்தி பயிற்சி மத்திய நிலையம் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியில் 20 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு அனுமதியின்றி வசிக்கும் குடியேற்றவாசிகள் அகற்றப்பட்டிருக்கவில்லை. | தெஹியோவிட்ட செயலாளருக்கு ஒப்படைப்பு பத்திரம் தயாரிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்பது. | காணியினைக் கையகப்படுத்தி அனுமதியின்றி குடியேறி இருப்பவர்களை அகற்றுதல் வேண்டும். |

**1.5.19 தலைப்பு 841 – மாகாண கல்வித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்கு அமைய காணப்பட்ட ரூபா. 105,675,000 ஆன 23 வாகனங்கள் மற்றும் மாகாண கல்வி அலுவலகம், கற்றல் மத்திய நிலையங்கள் மற்றும் மாகாண பாடசாலைகள் அமைந்துள்ள காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுப் பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 02 பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை விஞ்சி ரூபா. 16,736,960 ஆன மடிக்கணினிகள் மற்றும் மேசை மற்றும் கதிரைகள் 20 வீதம் வழங்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ள மடிக்கணினிகள் ஆகக் கூடிய அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது. | மேலதிகத்தை வேறு பாடசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி வேலை திட்டம் - (TEDP) | | |
| (i) | இந்த செயல்திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் 06 பாடசாலைகளுக்கு ரூபா. 279.9 மில்லியனான 05 தொழில்நுட்ப பீட கட்டடங்களை நிர்மாணித்தல், அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 04/2016 (II) இற்கு அமைய பிரதேச முன்னுரிமை மற்றும் CIDA தரப்படுத்தப்பட்ட முன்னுரிமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விலை மனு கோரி இருந்ததனால் 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 1.2.1 (இ) இற்கு அமைய தகைமை உடைய தரப்பினர்கள் பெறுகைகளில் பங்கேற்பதற்கு சந்தர்ப்பத்தை இழந்திருந்தனர். | எதிர்காலத்தில் பத்திரிகையில் விளம்பரப்படுத்தும் போது இந்தப் பிரிவினை அகற்றி விலைமனு கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுகைகள் வழிகாட்டல் பிரகாரம் விலைமனு கோருதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கொடுப்பனவு ரூபா.121,500 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | ஆலோசனை கிடைத்ததன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது. | மேலதிகமான கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கே/இம்புலான ஸ்ரீ சேன மகா வித்தியாலயத்தில் தொழில்நுட்ப பீடக் கட்டடத்தினை நிர்மாணிக்கம் போது மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சி ரூபா.3,200,944 செலுத்தப்பட்டிருந்தது. அது சதவீத ரீதியில் 104 - 4186 வரையான வீச்சு ஆகும். அதே போன்று, இரும்பு கம்பி மற்றும் ஒரு வேலை விடயத்திற்கு அதிகமாக செலுத்தப்பட்ட ரூபா. 175,646 இதுவரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் கண்டறிந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (iv) | இறக்குவானை புனித ஜோன் தமிழ் வித்தியாலயத்தில் மூன்று மாடி தொழில்நுட்ப பீடக் கட்டடத்தினை நிர்மாணிக்கும் போது நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா.265,187 செலுத்தப்பட்டிருந்த-துடன் கொடுப்பனவு தாமதம் அடைந்ததால் ரூபா.1,870,947 விசேட கட்டணமும் ஒப்பந்தக்காரரினால் கோரப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | பலாங்கொடை மற்றும் கலவான வலயத்தில் உள்ள 04 பாடசாலைகளில் நிலவும் மண் சரிவு அபாயம் தொடர்பில் தேசிய கட்டடங்கள் ஆய்வு அமைப்பினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மண் சரிவு அபாயத்தினைக் குறைப்பதற்கு செயற்திட்டத்தினால் விசாரணை செய்யப்பட்டுள்ளது என்பது. | தேசிய கட்டடங்கள் ஆய்வு அமைப்பின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | மாகாணத்திற்கு உரித்தான 160 பாடசாலைகளில் 147 பாடசாலைக் காணிகள் கையகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அனுமதியற்ற குடியேற்றவாசிகள் கையகப்படுத்தி இருந்த 10 பாடசாலைகளில் காணப்பட்ட 02 பேர்ச்சுகளுக்கும் 100 பேர்ச்சுகளுக்கும் இடைப்பட்ட காணி மற்றும் 03 கட்டடங்களை மீளவும் கையகப்படுத்தி இருக்கவில்லை. | இது தனியாகத் தீர்க்கக் கூடிய சிக்கல் இல்லை என்பதனால் மாகாணக் கல்வி அமைச்சினைத் தலையிடுமாறு கோரப்பட்டுள்ளது என்பது. | காணியின் உரிமையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | கஷ்ட சேவையில் உள்ள அதிபர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்குதல் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு | கஷ்டம் மற்றும் அதி கஷ்ட பாடசாலை வகைப்படுத்தல் தேசிய கொள்கையாகும். அதனால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள | கஷ்டம் மற்றும் அதிஷ்ட பாடசாலைகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களின் கீழ் மூலதன வளம் மற்றும் மின்சாரம் வழங்குதல், வீதி மேம்பாடு செய்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 2009 - 2023 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. எனினும், பிற்காலத்தில் அந்த பாடசாலைகளில் நிலவும் சிரமங்கள் தொடர்பில் மீளாய்வின்றி 13 வருடங்கள் தொடர்ச்சியாக அந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் மட்டும் மாகாணத்தினுள் கஷ்டம் மற்றும் அதி கஷ்ட கொடுப்பனவாக ரூபா.55,356,953 செலுத்தப்பட்டிருந்தது. | விடயம் எனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | |
| (எ) | முறைசாரா கல்வியின் கீழ் பலாங்கொடை கல்வி வலயத்தினுள் 11 ஆடை தைக்கும் பாடநெறிகள் 11 மத்திய நிலையங்களில் நடாத்தப்பட்டு வருவதுடன் அதில் சுமார் 05 மத்திய நிலையங்களில் 08 தையல் இயந்திரங்கள் காணப்படுவதுடன் ஏனைய மத்திய நிலையங்களில் 06 பயிற்சியாளர்களுக்கு தையல் இயந்திரங்கள் இருக்கவில்லை. அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரம் மற்றும் சிரட்டை செதுக்கல் பயிற்சி பாடநெறி நடாத்திச் செல்லப்பட்டு இருந்தபோதிலும், அந்த மத்திய நிலையங்களில் பயன்படுத்துவதற்கு எதுவித உபகரணங்களும் அரசினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. 20 பாடநெறிகளுக்கு 407 மாணவர்கள் பங்கேற்று இருந்ததுடன் இதற்காக ரூபா.888,000 தொகை 2023 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந்த பாடநெறியின் இறுதியில் சான்றிதழ் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 258 பேர் ஆகும். மாவனல்ல வலயத்தில் 30 மத்திய நிலையங்களில் தொழில்நுட்ப பாடநெறிகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 09 மத்திய நிலையங்களில் பாடநெறி நடாத்தப்பட்டு இருக்கவில்லை. | இந்தப் பாடநெறிகளின் பயிற்சி வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் கோரப்பட்டிருந்தது எனினும் அதற்கு நிதி கிடைக்கவில்லை என்பதனால் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. பாடநெறி ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு பயிற்சியாளர்கள் பாரிய அளவில் பங்கேற்று இருந்தாலும் 06 மாத இறுதி அளவில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து உள்ளது என்பது. | முறைசாரா கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | இரண்டாம் நிலை கல்விப் பிரிவு அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு (SESIP) 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா.20 மில்லியன் ஏற்பாட்டில் ரூபா.10 மில்லியனுக்கு நிதி கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா.9.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.<br>அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளது. | | |
| (i) | 2023 ஆம் ஆண்டுக்கு சாதாரண தரம் மற்றும் உயர்தர விடய முன்னேற்றத்திற்காக ரூபா.75.11 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும், நிதி கிடைக்காததன் அடிப்படையில் 88 சதவீதம் அதாவது ரூபா. 66.1 மில்லியன் ஒதுக்கீடு மீதியாகி இருந்தது. | வழங்கப்பட்ட ஒதுக்கீட்டிற்கு சமனான நிதி வழங்கப்பட்டிருக்குமாயின் இந்த தொகை மீதியாகி இருக்காது என்பது. | கல்வி அமைச்சின் மூலம் நிதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். |
| (ii) | விடய முன்னேற்றத்திற்கு ஆசிரியர்கள் 10499 பேரையும் மற்றும் மாணவர்கள் 13,312 பேரையும் பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிதி கிடைக்காததன் அடிப்படையில் வருட இறுதி வரையில் பயிற்சி பெற்றுக் கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 1728 உம் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை 8,869 உம் ஆகும். | கிடைத்த நிதி நிர்வகிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | ரூபா.6.87 மில்லியன் ஒதுக்கப்பட்டு 2920 ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், நிதி கிடைக்காத காரணத்தால் ரூபா.0.45 மில்லியன் செலவில் ஆசிரியர்கள் 163 பேர் மட்டும் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | எம்பிலிபிட்டிய வலயத்தில் நல்ல நிலைமையில் உள்ள 56 அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் தனித்தாள் உத்தியோகபூர்வ இல்லங்களில் 28 இல்லங்கள் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. அந்த இல்லங்களுள் அருகில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 11 பிரம்மச்சாரிகள் அறைகளுடன் கூடிய | கேகாலை வலயத்தில் சேதமடைந்த நிலையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லங்களைத் திருத்துவதற்கு போதிய அளவு நிதி இல்லாமை தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. பயன்படுத்தப்படாது காணப்படும் உத்தியோகபூர்வ | ஆசிரியர் இல்லங்களைப் பயன்பாட்டிற்கு கொள்ளுதல், திருத்தம் செய்தல் அல்லது அகற்றுதல் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 02 உத்தியோகபூர்வ இல்லங்களும் காணப்படுகின்றன. கேகாலை வலயத்தில் 37 ஆசிரியர் விடுதிகள் பல வருடங்கள் தொட்டு மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதுடன் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இல்லங்களைத் தேவையான நபர்களுக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஒ) | பாடசாலை மாணவர் தர வட்டத்திற்கான ஆலோசனை கோவைக்கு மற்றும் மாகாண நிரல் அமைச்சு செயலாளரின் 2023 ஒக்டோபர் 24 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்திற்கு முரணாக, பலாங்கொடை மற்றும் தெஹியோவிட்ட வலயங்களில் நீதிபதிகளுக்கு ரூபா.254,100 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மாகாண அமைச்சிடம் இருந்து இது தொடர்பில் ஆலோசனை கிடைத்தவுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது. | மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள தொகை மீள அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஓ) | பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கும் வேலைத் திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட ரூபா. 1458 மில்லியன் ஒதுக்கீடு 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.691 மில்லியன் ஒதுக்கீடு மீதியாக இருந்தது. இந்த வேலைத் திட்டத்திற்கான தரவு ஒழுங்கமைப்பொன்று வலயத்தில் காணப்படவில்லை. உலக உணவு வேலைத் திட்டத்திற்கு மேலதிகமாக லயன்ஸ் கிளப், Save the children, Rice up Sri Lanka மற்றும் சுயேட்சை குழுக்கள் மூலமும் இந்த பாடசாலைகளுக்கு உணவு வழங்கப்படும். எனினும், பாடசாலைக்கு கிடைத்த உணவுப் பொருட்களின் அளவு, விநியோகத்தருக்கு வழங்கப்பட்ட தொகை, சேதமடைந்த தொகை, களஞ்சிய சாலையில் எஞ்சி உள்ள தொகை என்பன தொடர்பில் எதுவித தகவல்களும் வலய அலுவலகத்திடம் காணப்படவில்லை. | பாடசாலை நடத்தப்படும் நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமை காரணமாக நிதி எஞ்சியுள்ளது என்பது. Save the children நிறுவனத்தினால் வழங்கப்படும் உணவுத் தொகை தொடர்பான தகவல்கள் வலய அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படுவதில் குறைபாடு காணப்படுகின்றது. சரியான முறையில் அறிக்கை இடுமாறு பாடசாலைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பது. | இந்த வேலைத் திட்டம் தொடர்பில் வலய மட்டத்தில் தரவு ஒழுங்கமைப்பொன்று பேணப்படுதல் வேண்டியதுடன் ஒதுக்கீட்டின் உச்சபட்ச பயன்பாட்டிற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஔ) | மாகாண கல்வி திணைக்களத்தில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 49 சிரேஷ்ட மட்ட பதவிகளில் குறைபாடு நிலவுவதுடன், இரண்டாம் நிலை மற்றும் முதன்மை மட்ட பதவிகள் | இது தொடர்பில் மாகாண பிரதான செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு மேலதிக பதவி அணியினரைப் பொருத்தமான வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | முறையே 2047 மற்றும் 28 மேலதிகமாகக் காணப்படுகின்றது. | | இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (க) | மாகாணத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பதவியணி 24,401 ஆக உள்ளதுடன், உண்மையான பதவியணி 20,423 என்பதால் குறைபாடு 3978 ஆக உள்ளது. மாகாணத்தில் அனைத்து வலயங்களிலும் ஆசிரியர் குறைபாடு காணப்படுகின்றது. | - மேற்படி - | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ங) | மாகாணத்தினுள் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1453 ஆக உள்ளதுடன், உண்மையான பதவியணி 762 ஆக உள்ளதால் குறைபாடு 691 ஆகும். அனைத்து வலயங்களிலும் அதிபர்களின் குறைபாடு காணப்படுகின்றது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.5.20. தலைப்பு 850 - காணி, மாகாண நீர்ப்பாசனம் விவசாயம், கால் நடை உற்பத்தியும் கால்நடை சுகாதாரமும் மற்றும் மீன் பிடிச் செயற்பாடுகள் மாகாண அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா. 27.6 மில்லியன் செலவில் 2020 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட கறிவேப்பிலை பயிற்சி மத்திய நிலையத்தின் விடுதியில் 32 மாணவர்களுக்கு தங்குமிடத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய 08 அறைகள் காணப்பட்ட போதிலும், அதில் 04 அறைகளில் அலுவலகம் நடாத்தப்பட்டு வருவதுடன் மீதி 04 அறைகளும் பயன்பாடின்றி காணப்பட்டது. அதேபோன்று, விடுதியுடன் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்து விரிவுரை மண்டபம் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் பயிற்சி வேலைத் திட்டங்களை நடத்துதல் உணவகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு விடுதி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அலுவலக கட்டடத்தின் திருத்த வேலை நடவடிக்கைகளையும் இந்த வருடத்தில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனால் அலுவலகத்திற்காகப் பயன்படுத்தப்படும் 04 அறைகளையும் மீள ஒப்படைக்க முடியும் என்பது. | நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களை அந்த நோக்கத்திற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வாகொல்ல பயிற்சி மத்திய நிலையம் அமைந்துள்ள சுமார் 02 ஏக்கர் அளவிலான காணியின் உரிமை கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் இறம்புக்கனை பிரதேச செயலாளரிடம் விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | காணியின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.21. தலைப்பு 851 – மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அரையாண்டு அறிக்கைக்கு அமைய, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை வருமான மீதி ரூபா. 100,960,240 ஆகும். | நிலுவை வரி தொகை அறவிடப்படும் என்பது. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபைக்கு நில அளவை உத்தியோகத்தர் ஒருவர் இல்லாததனால் இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டும் 137 நில அளவீட்டு விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசியமான நில அளவை நடவடிக்கைகள் பிரதேச நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் என்பது. | நில அளவை உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.22. மாகாண விவசாயத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாருக்வத்துற புதிய விவசாயப் பண்ணை 2023 ஆம் ஆண்டில் ரூபா. 6,183,263 ஆன தேறிய நட்டத்தினை அடைந்திருந்தது. | எதிர்காலத்தில் இந்த நிறுவனத்தினை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பது. | நட்டத்தினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மாகாண மலர் ஊக்குவிப்பு செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட 3,975 நாற்றுக்களில் ஒரு கன்றையேனும் நடுவதற்கு முடியாதிருந்ததால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா. 945,090 பலனற்ற செலவாகி இருந்தது. | இது தோல்வியடைந்ததாகும். மீதி 650 கன்றுகள் சிங்கராஜ வனத்தை அண்டி நடுவதற்கு கலவான சாத்திய அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது. | செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான 25 உத்தியோகபூர்வ இல்லங்களில் 08 இல்லங்கள் பயன்பாடின்றி காணப்படுகின்றன. | 7 இல்லங்கள் வசிப்பதற்கு பொருத்தமற்றதாகும். மற்றது எவராலும் கோரப்பட்டு இருக்கவில்லை. | சொத்துக்கள் பயன்படுத்தப்படாது வைத்தல் ஆகாது. |
| (ஈ) | வாகொல்ல விவசாயப் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கூடத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்கான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டில் ரூபா.4,383,142 ஆன வருமானம் மற்றும் ரூபா.4,583,115 ஆன செலவு என்பன திணைக்கள நிதிக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டிருக்கவில்லை. | தற்போது வியாபார முற்பணக் கணக்கு தயாரிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கொடுக்கல் வாங்கல்கள் முறையாக குறிக்கப்பட்டு நிறுவனத்தின் முன்னேற்றம் விசாரணை செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | மஹிபால ஹேரத் மக்கள் நிவாரண அறக்கட்டளைக்கு 2015 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்த 03 ரூட் காணி மற்றும் கட்டடம் 2024 பெப்ரவரி வரையிலும் மீளக் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணி மற்றும் கட்டடத்தினை ஒப்படைக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | காணி மற்றும் கட்டடத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

**1.5.21 தலைப்பு 853 – மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் முட்டை உற்பத்தியை 02 சதவீதத்தினால் அதிகரித்தல் நிறுவனத்தின் எதிர்கால நோக்காக இனம் காணப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தி 19 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தது. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுகாதார ரீதியிலான சிக்கல்களுக்கு மேலதிகமாக 2021, 2022 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டமையும் விவசாயிகளின் உற்பத்தி குறைவடைந்தல் இதற்கு காரணமாக இருந்தது என்பது. | இலக்கினை எட்டுவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட 13,300,000 லிட்டர் மாகாண பால் உற்பத்தியில் 46 சதவீதம் மட்டுமே | நாட்டின் நிலவிய பொருளாதார நெருக்கடி இதற்கு காரணமாகும். எதிர்காலத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்களை | இலக்கினை எட்டுவதற்கு முயற்சி செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | எட்டப்பட்டிருந்தது. அதேபோன்று, இலக்காகக் கொள்ளப்பட்ட 20,000 பால் பண்ணைகளில் 6,816 மட்டுமே நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 200 பால் சேகரிப்பு மத்திய நிலையங்கள் நடாக்கப்பட்டு வரவேண்டிய போதிலும் 104 மட்டுமே பேணப்பட்டு இருந்தது. | நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலக்கினை எட்ட முடியும் என்பது. | வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட 25 இனப்பெருக்க பண்ணைகளில் (Breeder Farm) 15 பண்ணைகள் மட்டுமே உருவாக்கப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டுவதற்கு முடியாதிருந்தது என்பது. | இலக்கினை எட்டுவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். |
| (ஈ) | பேராதெனிய, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் கால்நடை வளங்கள் புள்ளிவிபரக் கையேட்டில் கால்நடை வளங்கள் தொகை மற்றும் வருடாந்த பால் உற்பத்தி தொடர்பான புள்ளிவிபரத் தரவுகளுக்கு அமைய, சப்ரகமுவ மாகாணம் நாட்டில் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படும் மாகாணம் ஆகும். | சப்ரகமுவ மாகாணத்தில் நிலவும் காணி வரம்புகள், காலநிலை, மக்களின் மனோபாவம் போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த நிலைமை தோன்றியுள்ள போதிலும் கால்நடை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கால்நடை உற்பத்தி அதிகரிப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |